# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 17 வெள்ளிக்கிழமை (02 08 1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 241


# முகாமினுள் நுழைய முயலும் ராணுவம் மீது கடும் தாக்குதல்!

## ஆனையிறவில் சண்டை தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 2

**ஆனையிறவு தடை முகாமின் பின்பக்கத்தை நோக்கி கடல் நீரேரி வழியாக முன்னேறிய ஸ்ரீலங்கா இராணுவம், முகாமை நெருங்குவதற்கு எடுத்து வரும் சகல முயற்சிகளும் நேற்று முறியடிக்கப்பட்டன.**

**நேற்று முழு நாளும் விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதல் நடத்தி படையினரைத் திணறச் செய்தனர்.**

ஆனையிறவு தடை முகாமின் பின்பக்கத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறி வந்திருக்கும் படையினர், அப்பகுதிக்கு அப்பால் முன்னேற முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்றும் கடும் விமானத் தாக்குதல்களை நடத்தியபடி படையினர் முன்னேற முயற்சி எடுத்தனர்.

ஆனால் புலிகளின் எதிர்த் தாக்குதல்களினால் படையினரின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

மூன்று பொம்மர்கள், இரண்டு அவ்ரோ விமானங்கள், ஒரு ஹெலி ஆகியன மாறி மாறி இப்பகுதியில் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

நேற்றுக் காலை இப்பகுதியில் மீண்டும் ஆரம்பித்த மோதல்கள் நேற்று இரவு வரை தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றைய மோதல்களில் படையினர் தரப்பில் பலர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக் கட்டத் தாக்குதல் ஆரம்பமானதாக அறிவிப்பு

கொழும்பு, ஆக. 2

ஆனையிறவு இராணுவ முகாமை மீட்பதற்கான இறுதிக் கட்டத் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. மீட்புப் படையினர் எந்த நேரமும் முகாமைச் சென்றடையலாம்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சு நேற்றிரவு அறிவித்தது. ஆனையிறவுக் களத்தில் இருந்து வந்ததாகக் கூறப்பட்ட அதிகாரி ஒருவர் அங்குள்ள நிலைமையை நேற்று மாலை பத்திரிகையாளரிடம் விளக்கினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

ஆனையிறவு முகாமையும் அங்கு சிக்கியுள்ள சிப்பாய்களையும் மீட்பதற்காக வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினர் மொத்தம் உள்ள 9.5 கிலோ மீற்றர் தூரத்தில் இதுவரை 7 கிலோ மீற்றரைத் தாண்டிவிட்டனர்.

படையினர் தாம் கடந்த சென்ற இடங்களில் தமது நிலைகளைப் பலமாக்கிக் கொண்டுள்ளனர். விடுதலைப் புலிகள் பலமான நிலைகள் எமது வசமாகியுள்ளன.

ஆனையிறவு முகாமை மீட்பதற்கான இறுதிக் கட்டத் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டது. எந்த நேரமும் எமது படைகள் அதற்குள் நுழையலாம்.

கடந்த 22 நாள் யுத்தத்தில் மொத்தம் 149 படையினர் இறந்தனர். அவர்களில் ஏழு பேர் அதிகாரிகள். மூவர்

[ 3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் தாக்குதல்களை சமாளிப்பது மிகக்கடினம்

### செய்தி ஏஜென்சிகள் மதிப்பீடு

கொழும்பு, ஆக. 2

ஆனையிறவு முகாமை மீட்பதற்கான இறுதிக் கட்டத் தாக்குதல் ஆரம்பமாகிவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் தரப்பில் தெரிவிக்கப்பட்டாலும் —

படையினர் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதலை எதிர்நோக்கி வருவதாக — ஏனைய செய்தி ஏஜென்சிகள் தகவல் தெரிவித்தன.

''ஆனையிறவைச் சுற்றி வளைத்துள்ள புலிப்படையினரை அகற்றுவதற்கான இறுதித் தாக்குதல் நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதற்கு முன்னோடியாக ஸ்ரீ லங்கா இராணுவம் தமது படை அணிகளைப் பலப்படுத்துகின்றது''— என்று பி.பி.ஸி. தெரிவித்தது.

''விடுதலைப் புலிகளின் முற்றுகையை ஸ்ரீலங்காப் படைகள் உடைக்கக் கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது. எனினும் அவர்கள் புலிகளின் கடுமையான தாக்குதல்களை சமாளிப்பது இலகுவானது அல்ல. புலிகள் மிகக் கடும் எதிர்த் தாக்குதல்களை நடத்துகின்றனர்''— என்று இந்திய தூரதர்ஷன் நேற்று இரவு தெரிவித்தது. [அ-3]

### ஜி. சி. ஈ. (உயர்தரம்)

## வினாத்தாள் வந்ததும் பரீட்சை ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஆக. 2

''ஜி. சி. ஈ. (உயர்தர) பரீட்சைக்கான வினாத்தாள்கள் மற்றும் ஆவணங்கள் தாமதமாக வடக்கே வந்து சேர்ந்தாலும், அவை வந்து சேர்ந்த மறுதினத்தில் இருந்து முன்னர் வெளியிடப்பட்ட நேர அட்டவணைப்படி இங்கு பரீட்சையை நடத்தலாம்.''

—இவ்வாறு பரீட்சை ஆணையாளர் யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார்.

நேர அட்டவணைப்படி எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சையை 27 ஆம் திகதி வரை நடத்தி முடித்த பின்னர், தவறிப்போன பாடங்களுக்காக விசேட பரீட்சை ஒன்று நடத்தப்படும் என்றும்— பரீட்சை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து—

பரீட்சை சம்பந்தமான பணியில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மர் ரொக்கட் வீச்சில் இளைஞர் பலி; 6 பேர் காயம்

### சோரன்பற்றுப் பகுதியில் சம்பவம்

வடமராட்சி கிழக்கிலுள்ள சோரன்பற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் [புதன்] மாலை 6.10 மணியளவில் பொம்மர் நடத்திய ரொக்கட் தாக்குதலில் இளைஞர் ஒருவர் அந்த இடத்திலேயே பலியானார். மற்றும் 6 பேர் காயமடைந்தனா.

பொம்மரைக் கண்டு வீட்டுக் குசினி புகைக்கூட்டிற்குக் கீழ் ஒளிக்க முயன்றபோது ரொக்கட் குண்டு வெடித்து அவர் மரணமானதாகவும்—

புகைக்கூட்டிற்குக் கீழ் நின்றவர்களில் 6 பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரினதும், காயமடைந்தவர்களினதும் பெயர், விவரங்கள் தெரியவரவில்லை. [ஒ-117]

## ராஜீவ் கொலைச் சதியில் ஜனதா தள் பிரமுகர்?

ராஜீவ் காந்தி கொலை சம்பந்தமான சதி குறித்து ஜனதா தள் பிரமுகர் ஒருவருக்குத் தகவல் தெரிந்திருந்ததாம்.

இது விடயம் குறித்து நேற்று ராஜ்ப சபையில் கடும் வாக்குவாதமும் அமளியும் ஏற்பட்டன.

தங்கள் கட்சிப் பிரமுகருக்கு கொலைச் சதி குறித்துத் தகவல் தெரியும் என்ற குற்றச்சாட்டை ஜனதா தள் உறுப்பினர்கள் மறுத்தனர். (அ)

### பாதுகாப்புக் கருதி

## வரதராஜப் பெருமாள் இடம் மாற்றப்பட்டார்!

சென்னை, ஆக. 2

மத்திய பிரதேசம்—சண்டி நகரில் காட்டு பங்களா ஒன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாளுக்கு அதிக பாதுகாப்பு வழங்குவதற்காக அவர் வேறு இடம் ஒன்றிற்கு கொண்டு செல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

திரு. வரதராஜப் பெருமாளுக்கு தீவிர பாதுகாப்பு அளிக்கும் ஏற்பாடுகளை 'றோ' அமைப்பு ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் எங்கு கொண்டு செல்லப்பட்டார் என்ற விவரம் பற்றி அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் கொலைப்பட்டியலில் வரதராஜப்பெருமாளும் இடம் பெற்றிருப்பதாகக் கருதப்படுவதை அடுத்தே அவருக்குக் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## புலிகளுடன் தொடர்புடைய ஈழத் தமிழர் நாடு கடத்தல்!

### இந்திய உள்துறை அமைச்சர் சவான் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 2

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்துக் கொண்டுள்ள ஈழத் தமிழ் அகதிகள் அனைவரும் நாடு கடத்தப்படுவார்கள் என்று இந்திய அரசு அறிவித்திருக்கிறது.

இந்திய மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் இத்தகவலை நேற்று லோக் சபையில் வெளியிட்டார்.

தமிழகத்தில் உள்ள ஈழ அகதிகள் தம்மை உரிய விதத்தில் பதிவு செய்துள்ளார்களா என்பதைக் கண்டறிய தமிழ் நாட்டில் மாநில அதிகாரிகள் வீடு, வீடாகச் சென்று சோதனை நடத்தி வருகின்றனர் என்றும் அமைச்சர் சவான் கூறினார்.

இத்தகைய சோதனையின் போது, நாட்டில் குடியிருக்கத் தக்க ஆவணங்கள் வைத்திராமல் இருக்கும் இலங்கைப் பிரசைகள் கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களும் நாட்டைவிட்டு வெளியேற்றப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் சுமார் 2 லட்சத்து 10 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர் என்றும், அவர்களில் சுமார் 75 ஆயிரம் பேர் வரையில் இன்னும் தங்களைப் பதிவு செய்யவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். [இ-எ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு அறை கட்டக் கூடிய பனைமரக் கப்புகள், கதவு, நிலை, சீலிங்பலகை உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: துர்க்கா ரெக்ஸ், [உட்புறம்] 164, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(17707)

வெள்ளை நிற பெண் பொமனேரியன், ஒரு வயது நிரம்பிய நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.ஆனந்தராசர், [257]81/1, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (17461)

## மணப்பெண் தேவை

யாழ்ப்பாண இந்து 33 வயது B. Sc. Geology மணமகனுக்கு U. K., அவுஸ்திரேலியா, கனடாவுக்கு அனுப்பக்கூடிய படித்த மணப்பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். நட்சத்திரம், ரேவதி, மங்கள ஏஜென்சி: யாழ்ப்பாணம்.
(17713)

## வைத்தியர் தேவை

அனுபவமுள்ள ஆயுர்வேத வைத்தியர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். நேரம் காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை. இல. 1, நாவலர் வீதி, நாவாந்துறை [மார்க்கட் சந்தி] யாழ்ப்பாணம்.
(17462)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலைகால்வியல், சூதகக்குத்து, சரும நோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [4818]

## வெளிவந்து விட்டது

வெளிவந்து விட்டது. 10 ஆம், 11 ஆம் ஆண்டுக்கான 'தமிழ் இலக்கியம் சந்தர்ப்பம் கூறல்' By. செ. கதிர்காமத்தம்பி B. A, யே. அமலசீலன் B. A., பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம். வியாபாரிகளுக்கும், கல்லூரிகளுக்கும் விசேட கழிவு. விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
(சி/0274)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

1990 - 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம்

**கல்வியாண்டு பரீட்சைகள்**

கலை / வர்த்தகம் / முகாமைத்துவம்

மேற்படி பரீட்சைகள் யாவும் ஒரு மாத காலத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளன. புதிய திகதிகள் பின்பு அறிவிக்கப்படும்.

-பதிவாளர்.

(சி/0320)

உள்ளூரில் உற்பத்தி விடுதலைக்கு உயிர்நாடி.

---

## வட இலங்கை சங்கீத சபை
# வைரவிழா 8-8-1991

மேற்படி வைர விழாவில் இதுவரை ஆசிரிய தராதரப் பரீட்சையில் (தரம் ஆறு) சித்தியெய்திய கலைஞர்களுக்கு விழாவின்போது விசேட பட்டமளிப்பு வைபவமும் நடைபெற உள்ளது. தகைமை பெற்றவர்கள் 3-8-91 அன்று பி. ப. 4 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் தமது விவரங்களை ஒப்படைக்கவும்.

விவரங்களை வழங்கியவர்கள் 6-8-91 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு யா/ இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் ஆரம்ப வைபவத்தில் தவறாது பங்கு கொள்ளவும்.

இ. சுந்தரலிங்கம்,
கல்விப் பணிப்பாளரும்,
வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும்,

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
[4226]

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீரஜனனம்: 06 — 06 — 1963



வீரமரணம்: 02 — 08 — 1990

### மேஜர் சூட்டி
(சீவரட்ணம் - ஸ்ரீதரன் - தையிட்டி)

மறவேங்கை கூட்டத்தில் பலர் மடியலாம்
ஆனால் தமிழீழமே தாகமாய் போராடும் -
வீரவேங்கைகள் அழிவதில்லை
உனது இலட்சியம் நிறைவேறும் காலம் தூரமில்லை
உனது தாகத்தை தீர்க்க ஆயிரமாயிரம் -
வீரர் தோன்றுவர்
உன் வழி தொடர்வோம்.

இதே நாளில் வீரமரணமடைந்த சகல போராளிகளுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி/0275) தையிட்டி சிற்றூரவையினர்

---

## 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பராசக்தி செல்லப்பா
(கனகமுத்து)

தோற்றம்: 05 - 12 - 1910
மறைவு: 02 - 08 - 1971

பண்பான வாழ்க்கைத் துணைவியாய்
அன்பான தாயாய், இனிய சகோதரியாய்
எல்லோர்க்கும் உறுதுணையாய் - ஊர்
நடுவே நின்று நிழல் தந்த கனிமரமாய்
வாழ் வாங்கு வாழ்ந்து சிவபதமடைந்தாள்
எங்கள் கனகமுத்து.

அன்றும், இன்றும், என்றும் எங்கள் நினைவில்
நீங்காத உத்தமியின் திதி: 19 - 08 - 1991

செல்லப்பா, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்திமார்,
அனைவரும்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.
(சி/0261)

---

உ

கோண்டாவில் கிழக்கு

## அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய

வருடாந்த

# லக்ஷார்ச்சனை விஞ்ஞாபனம்

**அம்பிகை அடியார்களே!**

சனிக்கிழமை 03 - 08 - 1991 ஆம் திகதி பி.ப. 3-00 மணிக்கு ஸ்நபனா அபிஷேகம், பூஜை வசந்த மண்டபத்தில் தீபஆராதனையுடன் பத்துத் தினங்கள் அர்ச்சனை இடம் பெற்று அம்பாள் உள் வீதி உலா வருவார்.

கடைசித் தினமான ஆடிப்பூர நன்னாளில் பூர்வகர்மம் நடைபெற்று அர்ச்சனை நிறைவெய்தும்.

அடியார்கள் நெல்லி, துளசி, வில்வம், விளாத்தி, மாவிலங்கு, நொச்சி, முக்கிழுவை, பூக்கள் முதலிய பத்திர புஸ்பங்களையும், பால், இளநீர், நெய் போன்ற திரவியங்களையும் கொடுத்து அம்பாளின் அருளைப் பெற்றுக் கொள்ளவும்.

இங்ஙனம்:

பூ. க. இராசரத்தினம், செயலாளர்.
க. அருளம்பலம், தலைவர், அறங்காவலர்.

[17710]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 14 - 09 - 1918

இறப்பு: 02 - 08 - 1988

திதி: 31 - 07 - 1991



### அமரர் சதா ஸ்ரீநிவாசன்
(முன்னைநாள் D. R. O வும், சட்டத்தரணியும்)

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உடுவில். [17716]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 1936 — 06 — 14



மறைவு: 1991 — 07 — 03

அமரர்

### புளோரன்ஸ் அருந்தவமலர் அரியநாயகம்

பேரின்ப வாழ்வு பெறுவீர்களாக!

''அம்மா நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் விண்ணவர் வானதூதர் புனிதருடன் ஆண்டவர் அடியில் பேரின்ப வாழ்வு பெறுவீர்களாக.

அன்பான இறைவா! உம்மில் விசுவாசம் கொண்டு உமது இரக்கத்தை நம்பி வாழ்ந்த எமது அம்மா விண்ணரசில் இன்ப சாந்தி பெற்று உமது மகிமையில் வாழ அருள் புரிய வேண்டுகிறோம்.

கிளி/ புனித திரேசா மகளிர் மகாவித்தியாலய முன்னாள் உதவி அதிபர்:
திரு. அ. லோ. அரியநாயகம்
குடும்பத்தினர்.

''அன்னவாசா''
சூரார்வத்தை, சுன்னாகம். (17715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## முதலாளித்துவ இந்தியா!

தமது நாடு இப்போது அமெரிக்காவுடன் மிக மிக நெருங்கி வருவதாக இந்தியாவின் புதிய பிரதமர் திரு. நரசிம்மராவ் தெரிவித்திருக்கிறார்.

கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் யூனியனின் பிடி தளர்ந்துவிட்டது. அதுமட்டுமன்றி சோவியத் யூனியனிலேயே பொருளாதார அரசியல், சமூகப் பிரச்சினைகள் பூதாகாரமாக உருவெடுத்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் இந்தியா, அமெரிக்காவுடனான தனது அரசியல் பிணைப்புகளை நெருக்கமாக்கிக் கொள்வது அவசியமானதாகும். — என்று அவர் தமது இப்போதைய நிலைப்பாட்டை விளக்கியிருக்கிறார்.

தூரத் துருவங்களாக, பரம எதிரிகளாக, போட்டாபோட்டி இட்டுக்கொண்டிருந்த இருவல்லரசுகளான அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் கெடுபிடி யுத்தங்களை எல்லாம் களைந்து நண்பர்களாகிவிட்டன என்பது உண்மை தான்.

பொதுவுடைமை. கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார முறை ஆகிய கம்யூனிச கோட்பாடுகள் மற்றும் சித்தாந்தங்களை எல்லாம் களைந்து எறிந்துவிட்டு —

சனநாயக அரசியல் முறை, கட்டுப்பாடற்ற பொருளாதாரம், தாராள வர்த்தகம் என்பனவற்றுக்கு சோவியத் யூனியன் வழிமாறி இருப்பதும் உண்மை தான்.

அதேவேளை அங்கு பிரிவினை முயற்சிகளும், மற்றும் சமூகக் கிளர்ச்சிகளும் முளைத்திருப்பதும் தெரிந்தவையே.

அதனால், இந்தியா அமெரிக்காவின் பக்கம் சாய்வதை ஆட்சேபிக்கவோ, அது குறித்துக் கோபிக்கவோ, அல்லது பகைமை பாராட்டவோ ரஷ்யா அக்கறை கொள்ள வாய்ப்பில்லை. வஞ்சம் தீர்க்கவோ அல்லது தனது பக்கத்துக்குத் திரும்ப முனையவோ அதற்கு நேரமும் இல்லை.

இந்தியாவின் நிதி நிலைமை மிகவும் மோசமடைந்துவிட்டது. வெளிநாட்டுக் கடனாக மட்டும் அது 7,000 கோடி டொலர்களைச் செலுத்த வேண்டியுள்ளது. பொருளாதார வளர்ச்சி மிகவும் நலிவடைந்து விட்டது. சுருக்கமாகச் சொல்வதானால் இந்தியப் பொருளாதார உயிர் ஊசலாடுகிறது.

அதற்கு அவசர சிகிச்சை அளித்து உயிர் தப்ப வைப்பதற்கு உலக வங்கி, சர்வதேச நாணய சபை மற்றும் அமெரிக்க (முதலாளித்துவ) சார்பு நிறுவனங்களின் தயவை நாட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

அதன் பொருட்டே, உலக வங்கியின் பல நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளும் விதத்தில், இந்தியாவின் புதிய வரவு செலவுத் திட்ட யோசனைகள் அமைந்துள்ளன. ஒன்றுக்கு இரண்டு தடவைகள் ரூபாவின் நாணய மதிப்பு அங்கு குறைக்கப்பட்டது. வெளிநாட்டு மூலதனம் தாம்பூலம் வைத்து வரவேற்கப்படுகிறது!

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்தியாவில் நடைமுறையில் இருந்த சோஷலிசப் பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டு, திறந்த பொருளாதாரக் (முதலாளித்துவக்) கொள்கை கைப்பிடிக்கப்படுகிறது. அதன் ஆரம்ப விளைவாக உலக வங்கியும், ஐ. நா, சபையும் மொத்தம் 37 கோடி டொலர் உடனடி அவசரக் கடன் வழங்குவதாக அறிவித்திருக்கின்றன.

தன் காலில் நிற்கும் சுய பொருளாதாரக் கொள்கையை காலால் உதைத்துவிட்டு. அந்தோ, முதலாளித்துவத்தையும், தங்கு பொருளாதாரத்தையும் நோக்கி ஓடுகிறார் ராவ்!

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 2

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கிராமிய உற்பத்திக் குழுக்களின் தலைவர், செயலாளர் கலந்து கொள்ளும் மாதாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவசரகால முதலுதவிபயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஆக. 2

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியின் பொறியியல் மாணவர் மன்றத்தால் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3. 30 மணிக்கு அவசரகால முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்ட உள்ளன. இந்தப் பயிற்சி வகுப்புகள் ஐந்து தினங்கள் நீடிக்கும்.

## விசேட பூசைகள்

சுழிபுரம், ஆக. 2

ஆனையிறவு மண்மீட்புப் போரில் ஈடுபட்டுள்ள போராளிகளுக்கு வெற்றி வேண்டியும், வீரமரணமடைந்த போராளிகளின் ஆத்மா சாந்திக்காகவும் இன்று சுழிபுரம் பத்திரகாளி கோவிலில் விசேட பூசை, பொங்கல், பிரார்த்தனை ஆகியவையும்—

மூளாய் வரதன்புலோ சித்தி விநாயகர் ஆலயத்தில் நாளை விசேட பூசை, பிரார்த்தனையும் நடைபெறவுள்ளன.

## மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 2

ஆனையிறவில் நேற்று முன்தினம் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்த அன்பு [யாக்கோப் அல்வின் கோட் - ஆனைக்கோட்டை) என்ற போராளியின் புகழுடல் நேற்று ஆறுகால்மடம் ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாசாலையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் புகழுடல் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

## வீரவணக்கம்

யாழ்ப்பாணம், ஆக. 2

ஆனையிறவில் நேற்று முன்தினம் துணைப்படை வீரர் கண்ணன் (நல்லையா பகீரதன் —பளை) என்பவர் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி மரணமானார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ஓ)

## பொன்னாலை நோக்கி ஷெல்

சுழிபுரம், ஆக. 2

காரைநகர் படையினர் நேற்று முன்தினம் (புதன்) மாலை 6 மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இதனால் வீடுகள் சில சேதமுற்றன.

பொன்னாலை பிள்ளையார் கோவிலுக்குச் சமீபமாகவும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஓ-28]

## தொண்டர் ஆசிரியர் சங்க கூட்டம்

போர்க்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்கான தொண்டர் ஆசிரியர் சங்கக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ்.ஸ்ரான்லி வீதியில் உள்ள பட்டப் படிப்பு கல்லூரியில் நடைபெற உள்ளது. (இ)

## தடை நீக்கம்

இலங்கையில் நடந்துவரும் போர் குறித்த வீடியோ படங்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முன்னர் விதிக்கப்பட்டிருந்த தடையை இலங்கை அரசு நேற்று முதல் [illegible]டது. இத்தகவலை [illegible] தாஸ் வானொலி நேற்றுவெளியிட்டது. (உ-எ)

## செய்திச் சாரம்

## பாஸ்போர்ட் விண்ணப்ப படிவங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 2

சுமார் 4 ஆயிரம் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

கடவுச்சீட்டுப் பெற விண்ணப்பிப்பவர்கள் அதனை உறுதி செய்தே விண்ணப்பப் படிவங்களைப் பெறலாம் என்றும்—

விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் அடையாள அட்டை இலக்கம் எழுதப்பட்டே வழங்கப்படும் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகக் கடவுச்சீட்டு கிளையில் இலவசமாகவே வழங்கப்படும். [ஓ-5]

## ஜெயலலிதாவுக்கு சம்பளம் ஒரு ரூபா!

சென்னை, ஆக. 2

முதலமைச்சருக்குரிய சம்பளத்தை பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்று செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

அடையாளமாக ஒரு ரூபா மட்டுமேதான் மாதாமாதம் பெற்றுக் கொள்ளப்போவதாகவும் அவர் தெரிவித்தார். [உ-எ]

## கடற்படையின் புதிய தளபதி

கொழும்பு, ஆக .2

இலங்கைக் கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோ பதவி ஏற்றிருக்கிறார்.

இதுவரை காலமும் தளபதியாகப் பணிபுரிந்த ரியர் அட்மிரல் ஆனந்த சில்வா ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இப்புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது. (ஓ-எ)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 2

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் என்று மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. [ஓ]

## சரத்பவார் தமிழகத்தில்!

தமிழகக் கடலோரப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவது குறித்து இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்துவார்.

தமிழகம் வந்திருக்கும் அமைச்சர் சரத்பவார் நேற்றிரவு சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார். [உ-3]

## தமிழ் அகதிகள் நாடு திரும்ப காலக்கெடு இல்லை

புதுடில்லி, ஆக. 2

தமிழகம் மற்றும் ஒரிஸ்ஸா ஆகிய இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாக சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல காலக்கெடு எதுவும் [illegible] அரசு அதிகாரி ஒருவர் சொன்னார். (த.எ)

## வெளிநாட்டு அகதிகள் விவகாரம்:

## பிரி. அரசின் யோசனையை குடியேற்ற சபை நிராகரிப்பு

லண்டன், ஆக. 2

பிரிட்டனில் தஞ்சம் கோரும் வெளிநாட்டு அகதிகள் தாம் விரும்பும் வழக்கறிஞர்களிடம் இருந்து சட்ட ஆலோசனை பெறும் உரிமையை ரத்துச் செய்யும் பிரிட்டிஷ் அரசின் யோசனையை,பிரிட்டிஷ் குடியேற்ற ஆலோசனைக் கமிட்டி நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பிரிட்டனில் தஞ்சம் கோரும் வெளிநாட்டு அகதிகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் முகமாக கடுமையான நடவடிக்கைகள் கொண்ட யோசனைகளை இம் மாதம் முதலாம் திகதியில் இருந்து அமுல் நடத்தப்போவதாக பிரிட்டிஷ் அரசு கடந்த மாதம் அறிவித்திருந்தது.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் கென்னத் பேக்கர் சமர்ப்பித்திருந்த இந்த யோசனைகளில் ஒன்று, தஞ்சம் கோரும் வெளிநாட்டு அகதிகள் தாம் விரும்பும் வழக்கறிஞர்களிடம் இருந்து ஆலோசனை பெற வழங்கப்பட்டு இருந்த உரிமையை ரத்துச் செய்வதாகும்.

இதற்குப் பதில், அரசின் நிதியுதவியுடன் இயங்கும் பிரிட்டிஷ் குடியேற்ற ஆலோசனைக் கமிட்டியின் ஆலோசனையையே தஞ்சம் கோரும் வெளிநாடுகளைச் சேர்ந்த அகதிகள் பெறவேண்டும் என்றும் அரசின் யோசனையில் கூறப்பட்டிருந்தது.

அரசின் இந்த யோசனையை ஏற்று வெளிநாட்டு அகதிகளுக்காக வாதாடுவதா என்பது பற்றி ஆராய பிரிட்டிஷ் குடியேற்ற ஆலோசனைக் கமிட்டியின் செயற்குழு கடந்த புதன்கிழமை லண்டனில் கூடி ஆராய்ந்தது.

அப்போதே அரசின் யோசனையை நிராகரிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## பங்களாதேஷில் இருந்து

## அத்வானியைக் கொல்ல தீவிரவாதிகள் வருகை!

பாரதீய ஜனதா கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எல். கே. அத்வானியைக் கொலை செய்யும் நோக்கத்துடன் பங்களாதேஷில் இருந்து சில தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நுழைந்திருப்பதாக புதுடில்லிப் பத்திரிகைகள் சில நேற்று செய்தி வெளியிட்டிருந்தன.

இது குறித்து லோகசபையிலும் நேற்று பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக தக்க நடவடிக்கை எடுக்கும்படி சபாநாயகர் சிவராஜ் பட்டீல் மத்திய அரசைக் கோரியிருக்கிறார். [ஓ-எ]

## இம்முறை நிவாரணத்துக்கு அரிசி வழங்கப்படமாட்டாது

யாழ்ப்பாணம், ஆக. 2

இடம்பெயர்ந்தோர், தொழில் இழந்தோர் ஆகியோருக்கான இம்மாத உலர் உணவு விநியோகத்தில் அரிசி வழங்கப்படமாட்டாது.

மேற்கண்ட தகவலை யாழ். செயலகதிட்டப்பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த உலர் உணவு விநியோகத்தில் மா, சீனி, பருப்பு, பால்மா வகைகளே வழங்கப்படவிருப்பதாகவும்— நாளை தொடக்கம் 9 ஆம் திகதி வரை முதல் கட்ட விநியோகமும், 9 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை இரண்டாம் கட்ட விநியோகமும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கப்பல்கள் மூலம் உணவுப் பொருள்கள் வந்து சேர்ந்த பின்னர் மக்களுக்கு மேலதிகமாக அவற்றை வழங்குவது பற்றி அறிவிக்கப்படும் என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-3)

## அக்கறையுள்ள விடயங்களில்

## இந்தியாவுடன் ஸ்ரீலங்கா இணைந்து செயற்படும்

அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்தின் இந்தியப் பயணம் இந்திய — இலங்கை உறவின் அனைத்து அம்சங்களிலும் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

இப்படி கொழும்பில் வெளியிடப்பட்ட வெளியுறவு அமைச்சின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லி விஜயத்தின் போது அமைக்கப்பட்ட இந்திய -இலங்கை கூட்டு ஆணைக்குழு பரஸ்பர உறவுகளின் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும் என்றும்—

இருதரப்பு அக்கறையுள்ள விஷயங்களில் இரு நாட்டு அரசுகளும் ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை மேற்கொள்ளும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. [ஓ-எ]

## தி. மு. க. - பாட்டாளி கட்சி இணைந்து போட்டியிடும்?

சென்னை, ஆக. 2

தமிழகத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் தி. மு. கவும் பாட்டாளி மக்கள் கட்சியும் கூட்டுச் சேர்ந்து போட்டியிட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இரண்டு கட்சிகளையும் சேர்ந்த சில முக்கியஸ்தர்கள் இது தொடர்பான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்று சென்னைச் செய்திகள் தெரிவித்தன.

கடந்த சட்டசபைத் தேர்தலில் பாட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிட்டதும் தி. மு. க. வெற்றி வாய்ப்பை இழந்ததற்கான காரணங்களில் ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இறுதிக்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடற்படையைச் சேர்ந்தவர்கள் — என்றார்.

ஆனையிறவு முகாம் வரை படத்தின் உதவியுடன் படையினர் முன்னேறிய பகுதிகளை செய்தியாளர்களுக்கு அந்த அதிகாரி விளக்கினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

## இரத்தினம் சண்முகநாதன் (பபி)

(உதவிக் கணக்காளர், மாலைதீவு)

பரு. ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும், துன்னாலை தெற்கைச் சேர்ந்தவருமான இரத்தினம் சண்முகநாதன் 10 - 07 - 1991 அன்று மாலைதீவில் காலமானார். இவர் காலஞ்சென்ற இரத்தினம் (றெயில்வே ஓடிற்றர்) தம்பதியின் ஏக புதல்வனும், சீதாதேவி [பரு. மெதடிஷ்த பெண்கள் பாடசாலை ஆசிரியை)யின் அன்புக் கணவரும், சிதம்பரநாதன் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), அன்னம்மாவின் மருமகனும், இரத்தினம் [இளைப்பாறிய தலைமையாசிரியர்) தம்பதிகளின் பேறாமகனும், கௌஷியா, வித்யா, (பரு. மெ. பெ. உ. பாடசாலை, மாணவியர்), பிரதீப் (பரு. ஹாட்லிக் கல்லூரி, மாணவன்), அகல்யா ஆகியோரின் அன்புப் பப்பாவும், தெய்வேந்திரராசா (இளைப்பாறிய P.W.D ஓவசியர்), ஆனந்தரர்சா (தீயணைக்கும்படை பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம்), மகேந்திரராசா (U. K.), குலேந்திரராசா (Holland) ஆகியோரின் ஏக மைத்துனனும், வசந்தா, ராகினி (ஆசிரியை, பரு. மெ. பெ. உ. பா.)யின் சகோதரனும், சிந்துஜன், அபிராமி, சுபாங்கி, வினோத் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

கொழும்பில் நடைபெற்ற அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், மரணச்செய்தி கேட்டு அவரது இல்லத்திற்கு வந்து ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்த உறவினர்கள், நண்பர்கள், ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ மாணவியர் அனைவருக்கும் எமது நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்

துன்னாலை, கரவெட்டி. (17709)

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மடியில்:
14-11-1935

இதயத்தில்:
02-08-1980



## சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன்

ஆண்டு பதினொன்று ஆன போதிலும்,
அன்று மூண்ட தீ இன்னும் அணையவில்லை
நின்று எரிகிறது; நிற்காது தொடர்ந்தெரியும்
மாமலை தான் சரிந்ததுவோ!
பிஞ்சுகளே பாரிய சுமை தாங்கி,
நெஞ்சினிலே நெருப்பேந்தி நிற்கின்றார்
எண்ணி, ஏங்கி, தேய்ந்து, கருகி,
உருகி வாடும், பாழும் இதயம்,
அண்மிந்து நின்றன்பாய் அழைப்பது
கேட்கலையோ?

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவு நிலைத்திருக்கும்.

அன்றும், இன்றும், என்றும்,
உங்கள் அருமை—
மனைவி, பிள்ளைகள்.

கனால் வீதி,
மாதகல். [17717]

# மரண அறிவித்தல்

## திருமதி விசாலாட்சி செல்வவிநாயகமூர்த்தி

அளவெட்டி, காலஞ்சென்ற பிரபல கண் வைத்தியர் நல்லதம்பி செல்வவிநாயகமூர்த்தியின் அன்பு மனைவி விசாலாட்சி காலமானார். அன்னார் தேவநாதன் (நாதன் கண் வைத்தியசாலை, அளவெட்டி), சிவலிங்கம் (முன்னாள் கணக்காளர், யாழ். போதனா வைத்தியசாலை), ஞானசக்தி [கனடா], சுப்பிரமணியம் [கனடா], விசுனராஜா (U.K.), சித்திராங்கி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிதம்பராதேவி, மீனலோஜினிதேவி, சரோஜினிதேவி, இந்திராணி, காலஞ்சென்ற நவரத்தினராஜா, குகநேசன் [ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி] ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 2 - 8 - 91 இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் 'யமுனா' ஸ்ரேசன் வீதி, கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. குகநேசன்

கொக்குவில். (17718)

## வினாத்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பரீட்சார்த்திகள் வேறு இடங்களுக்கு செல்லாது, குறுகியகால அறிவித்தலில் யாழ். கல்வி அலுவலகத்தில் சமுகம் தந்து அனுமதி அட்டைகளைப் பெறத் தயாராக இருக்கவேண்டும் என்றும்—கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை—

இடம்பெயர்ந்த மாணவர்களும் பரீட்சைக்கு தோற்றும் வகையில் விசேட பரீட்சை நிலையம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்க அனுமதியைப் பெறும் முயற்சியில் யாழ். கல்விப் பணிப்பாளர் ஈடுபட்டுள்ளார்.

இதற்கிடையில்—

நாளை 3ஆம் திகதி ஆரம்பமர்கும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை மற்றும் இம் மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை ஆகியன யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன. என்றும்—

இம் மாவட்டங்களில் நிலைமை சீரானவுடன் குறுகிய கால அறிவித்தலில் இப் பரீட்சைகள் நடத்தப்படும் என்றும்—

பரீட்சைத் திணைக்களம் நேற்று அறிவித்தது.

(இ-உ-எ-3-5)

## முகாமினுள்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் தரப்பில் வடமராட்சியைச் சேர்ந்த கணேஷ் என்ற போராளி உட்பட சிலர் வீர மரணம் அடைந்தனர்.

# அடையாள அட்டையை புதுப்பிப்பதற்கு படிவம்

## யாழ். செயலகத்துக்கு வந்துள்ளது

யாழ்ப்பாணம், ஆக. 2

தேசிய அடையாள அட்டைகளைப் புதுப்பிப்பதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

10 வருடங்களுக்கு மேல் பயன்படுத்திய அடையாள அட்டைகளைப் புதுப்பிக்கும் திட்டத்தின் படிமுதலில் 1972, 73 ஆம் ஆண்டுகளில் பெற்ற அடையாள அட்டைகளை வைத்திருப்போர் அவற்றைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1972 – 73 ஆம் ஆண்டுகளில் பெற்ற தேசிய அடையாள அட்டைகள் விரைவில் செல்லுபடியாகாதவையாக அறிவிக்கப்படவிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்திருக்கிறார்.

எனவே குறிப்பிட்ட ஆண்டுகளில் பெற்ற தேசிய அடையாள அட்டைகளை வைத்திருப்போர் தங்கள் பகுதிக் கிராமசேவையாளர்களிடம் சென்று புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும்படி ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் அறிவுறுத்தியிருக்கிறார்.

[ஓ-எ-5]

# விசேட பொதுக்கூட்டம்

## யாழ். வர்த்தகர் சங்கம்

விசேட பொதுக்கூட்டம் 03 - 8 - 1991 சனிக்கிழமை மாலை 2-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். பல முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட இருப்பதால், சகல வர்த்தகர்களும் குறித்த நேரத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

சி. நமசிவாயம்,
பொதுச் செயலாளர்.

க. வி. குலரத்தினம்,
தலைவர்.

(17714)

# முதல் திங்கள் நினைவு நாள்

தோற்றம்:
1959 / 12 / 22



மறைவு:
1991 / 07 / 03

## வரதன் [அப்புச்சி]

(நடராஜா வரதராஜா)

வரதன் —
எங்கள் —
காற்றும் மண்ணும் கடலும்
உன் மரணம் கேட்டுத் திகைத்தன.
சிங்களத் தேசத்தில்
உன்னை நீ இழந்ததைக் கேட்டு
எங்கள் இதயங்கள் இயங்க மறுத்தன
ஆனாலும்,
நாம் ஆறுதலடைகின்றோம் — ஏனெனில்
உன் மரணம்
உன்னதமானது; அர்த்தமுள்ளது.

● அன்புத் தங்கை, அம்மா, அண்ணன்
● நண்பர்கள்

சாமியன் அரசடி,
கரவெட்டி. [சி/0322]

இப் பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேட் லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 02 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org